பொருட்களை அள்ளித் தரும் தான்யலட்சுமியாக, துணிவைத் தரும் தைரியலட்சுமியாக, நேர்மையைத் தரும் விஜயலட்சுமியாக, கருணை காட்டும் கஜலட்சுமியாக, செழிப்பைத் தரும் சந்தானலட்சுமியாக, கல்வி தரும் வித்யா லட்சுமியாக, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியைத் தரும் ஜெயலட்சுமியாக, அனைத்து வசதிகளையும் திருக்கோயில்கள் பெற அறிவிப்புகள், கிலுகிலுப்பை பொம்மைகள் உட்பட "அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம்" வழங்குதல் என சுகாதாரத் துறையில் பல்வேறு அறிவிப்புகளைச் செய்து அனைத்தையும் வாரி வாரி வழங்கும் ஐஸ்வர்யலட்சுமியாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவையின் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 2 மணியோடு மானியக் கோரிக்கைகளை முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் இன்று எடுத்துக்கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இன்றைக்கு நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். சத்துணவுதானே? உட்காருங்கள் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தினமும் எடுத்துக்கொண்டேன் அல்லவா? (குறுக்கீடுகள்) இன்றைக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்). உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு நிறைய அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறோம். அதுகுறித்து. . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். சத்துணவுத் துறை குறித்த பிரச்சினைதானே, உட்காருங்கள் அதனை நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, முனைவர் ஜவாஹிருல்லா? சொல்லுங்கள்.

[2014 ஆகஸ்ட் 12

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து ரம்ஜான் விடுமுறைக்குப் பிறகு கேரளாவிலிருந்து சென்னை வருவதற்கு . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, டாக்டர் கிருஷ்ணசாமி? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, கிருஷ்ணசாமி?*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75-க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் இல்லை. சத்துணவுத் துறை குறித்து சொல்லுங்கள். இல்லை என்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

(ஆ) அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் ஊதிய உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன, திரு. சவுந்தரராசன்? சொல்லுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மற்றும் . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள், விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*